**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகாசி.**
**முன்னிலை : திரு.அ. விஜயபாரதி, பி.ஏ., பி.எல்.,**
நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.
2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை.

**சி.ஆர்.எம்.பி.எண்.448/2026**

இன்

**பி.ஆர்.எண்.114/2026**

வேல்முருகன் (வயது 35/2026),
த/பெ.நாகராஜன்,
க.எண்.137/4, பாண்டியன் நகர்,
3 வதுதெரு,
திருத்தங்கல். ..... மனுதாரர்/வாகன உரிமையாளர்/3 ஆம்நபர்

/எதிராக/

அரசுக்காக உதவிஆய்வாளர்,
சிவகாசி கிழக்கு காவல் நிலையம்,
குற்ற எண்.267/2026,
பி.என்.எஸ்.பிரிவுகள் 309(6), 311, 329(4), 351(3), 79 மற்றும்
தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை
தடுப்புச் சட்டம். ..... குற்றமுறையீட்டாளர்/எதிர்மனுதாரர்

இம்மனு 03.07.2026 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பின் பதிலை பெற்றும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனுவை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

1) இம்மனு மனுதாரர்/வாகன உரிமையாளர்/3 ஆம்நபர் தரப்பில் பி.என்.எஸ்.எஸ். பிரிவு 497 மற்றும் 503–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் மனுவில் வழக்குச் சொத்தான TN 95 Q 2013 என்ற பதிவு எண் கொண்ட Bajaj KTM Duke இருசக்கர வாகனமானது மேற்படி வழக்கில் போலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனம் செயல்பாடின்றி ஒரே இடத்தில் நிற்பதால் பராமரிப்பின்றியும், மழை, வெயிலினால் பாதிக்கப்பட்டும் பழுடைந்து பயனற்று போய்விடும் என்றும், மேலும், வழக்குச்சொத்தை தன்னிடம் ஒப்படைக்காத பட்சத்தில் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும்

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

வழக்குச் சொத்தான கனரக வாகனத்தை தன்னிடம் இடைக்காலமாக ஒப்படைக்கக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) அரசு தரப்பில் பி.ஆர்.எண்.114/2026 இல் உள்ள வழக்கின் சொத்தான TN 95 Q 2013 என்ற பதிவு எண் கொண்ட Bajaj KTM Duke இருசக்கர வாகனத்தை மனுதாரருக்கு வழங்கினால் வழக்கு சொத்தினை விற்பனை செய்யவோ, வண்ண மாற்றம் செய்யவோ வாய்ப்புள்ளது என்பதாலும் வழக்குச் சொத்தை மனுதாரரின் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்குச் சொத்தானது இந்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.114/2026 என நம்பரிடப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிவு சான்றிதழின் அடிப்படையில் மனுதாரர்தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்பதை பொறுத்து இந்த வழக்கில் எந்த பூசலும் கிடையாது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றைய தினமே வழக்குச் சொத்தானது எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மனுச்சொத்தான இருசக்கரவாகனம் மழையிலும், வெயிலிலும் திறந்த வெளியில் நிற்பதால் மதிப்பும் அதன் தன்மையும் சீர்கெடும் என்று மனுதாரர் தரப்பில் முன் வைத்த வாதத்தினை ஏற்று மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள Sundarlal Ambai Desai – Vs – State என்ற வழக்கின் தீர்ப்பு படி TN 95 Q 2013 என்ற பதிவு எண் கொண்ட Bajaj KTM Duke இருசக்கர வாகனத்தினை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

1) மனுதாரர் தானும் தன்னுடன் இரு பிணையதாரரும் தலா ரூ.75,000/–க்கான பிணைப்பத்திரம் எழுதி தர வேண்டும்.

2) மனுதாரர் மனுச்சொத்தை புகைப்படம் எடுத்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

3) மனுச்சொத்தை விற்கவோ, வண்ணமாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ, எவ்வித பாராதினமோ செய்யக்கூடாது.

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

5) மனுதாரர் மனுச்சொத்தைப் பொறுத்து உறுதிமொழி ஆவணம் நீதிமன்றத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும்.

6) வழக்கு விசாரணையின் போதும், நீதிமன்றம் உத்தரவிடும் போதும் மனுச் சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

இந்த உத்தரவு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
சிவகாசி.
நாள் .07.2026

**மெமோ–**

பொருள் – வழக்குச் சொத்து – சிவகாசி கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.267/2026 பி.என்.எஸ்.பிரிவுகள் 309(6), 311, 329(4), 351(3), 79 மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் வழக்கில் பி.ஆர்.எண்.114/2026 இல் ஒப்படைக்கப்பட்டுள்ள வழக்குச் சொத்தான TN 95 Q 2013 என்ற பதிவு எண் கொண்ட Bajaj KTM Duke இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளரிடம் மனுவின் பேரில் இடைக்கால பொறுப்பில் வழங்குதல் – சம்பந்தமாக.

பார்வை – இந்நீதிமன்ற சி.ஆர்.எம்.பி.எண்.448/2026, நாள் 01.08.2026

பார்வையில் கண்ட இந்நீதிமன்ற உத்தரவின்படி வழக்குச் சொத்து – சிவகாசி கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.267/2026 பி.என்.எஸ்.பிரிவுகள் 309(6), 311, 329(4), 351(3), 79 மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் வழக்கில் பி.ஆர்.எண்.114/2026 இல் ஒப்படைக்கப்பட்டுள்ள வழக்குச் சொத்தான TN 95 Q 2013 என்ற பதிவு எண் கொண்ட Bajaj KTM Duke இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளரிடம் மனுவின் பேரில் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவு செய்யப்பட்டுள்ளது.

எனவே சிவகாசி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் மேற்படி வழக்குச் சொத்தை அதன் உரிமையாளரான கீழ்க்கண்ட நபர் வசம் ஒப்படைத்து அதற்கான ஒப்புகையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உத்தரவின்படி

தலைமை எழுத்தர்,
நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம்,
சிவகாசி.

**பெறுநர்**
உதவி ஆய்வாளர்,
சிவகாசி கிழக்கு காவல் நிலையம்,
சிவகாசி.

**நகல்**
வேல்முருகன் (வயது 35/2026),
த/பெ.நாகராஜன்,
க.எண்.137/4, பாண்டியன் நகர்,
3 வதுதெரு,
திருத்தங்கல்.